## இழப்பீடுகளுக்கான அலுவலகம் - 2020

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

இழப்பீட்டுக்கான அலுவலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புகள் மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிராகரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

அலுவலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும், அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்புகள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அலுவலகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அலுவலகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அலுவலகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கல்வி நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கல்வி நிறுவனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய அனைத்து பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டை பெற்றுக்கொள்வது எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோளாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ் கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மெற்கொள்ளப்படும் பொருளதார தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்கு செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீட்டு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளுதல் மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றை கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அலுவலகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்றிறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு அலுவலகத்திற்குள்ள ஆற்றல் தொடர்பில் குற்ப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருன்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்கு வந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள்

போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாக காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் அலுவலகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதினை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அலுவலகத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள், மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக செய்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அலுவலகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்க பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீரமானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2006 இலக்கம் 4(2) | ஆகக் குறைந்தது மூன்று வருடங்களுக்காக பெறுகைகள் திட்டங்களும், அதற்கடுத்த வருடத்திற்கான பெறுகை நடவடிக்கைகளுக்கான விரிவான பெறுகைகள் திட்டமொன்றும் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், ரூபா 10,500,000 பெறுமதியான பெறுகைகளை உள்ளடக்கி 2020ஆம் ஆண்டுக்குரிய பெறுகைகள் திட்டமொன்று மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. | விரிவான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறான போதிலும், 2021ஆம் ஆண்டுக்கான விரிவான பெறுகைகள் திட்டத்தினை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அரசாங்க பெறுகைகள் வழிகாட்டியின் பிரகாரம் விரிவான பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.6 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| இழப்பீட்டுக்கான அலுவலகத்தினால் வங்கிக்கு வழங்கப்பட்டிருந்த நிலையான கட்டளையின் அடிப்படையில் நடைமுறைக் கணக்கின் மிகையான பணம் தன்னியக்க முறையில் சேமிப்புக் கணக்கினூடாக பறிமாற்றம் செய்வதற்காக திறைசேரியின் அங்கீகாரமின்றி 2013 யூன் மாதம் முதல் சேமிப்புக் கணக்கொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், நிதிப்பிரமாணம் 215இற்கு முரணாக மேலதிக பணிகளுக்காக கட்டுநிதி நிறுத்திவைக்கப்பட்டிருந்தது.<br><br>அவ்வாறே, மேற்படி சேமிப்பு கணக்கிற்கு 2013 யூன் மாதம் முதல் 2020 திசெம்பர் 31 வரையிலுமான காலப்பகுதிக்காக ரூபா 39,749,629 தொகையான வட்டி வருமானமொன்று சேகரிக்கப்பட்டிருந்தது. இழப்பீட்டுக்கான அலுவலகத்திற்கு இந்த கட்டுநிதி வசதியினை வழங்குவதற்காக திறைசேரிக்கு குறுங்கால கடன் பெறுகை கிரயமாக அதனை விட அதிக கிரயத்தினை மேற்கொள்ள நேர்கின்றமையால் உரிய முறையில் கட்டுநிதி முகாமை செய்து உரிய சந்தர்ப்பத்தில் திறைசேரியிலிருந்து கட்டுநிதி கிடைத்தால் பொது திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த நலன்களை விஞ்சிய நிதிக் கிரயத்தினை மேற்கொள்ள நேர்ந்திருக்காது என்பது அவதானிக்கப்பட்டது. | சேமிப்பு கணக்கொன்றின் வட்டியானது எந்தவிதமான சட்டத்திற்கு முரணான விடயத்திற்கும் பயன்படுத்தப்படாது மிகவும் வெளிப்படைத்தன்மையுடன் முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளது என்பதை விருப்புடன் தெரிவித்துக்கொள்கின்றேன். தற்போது இழப்பீட்டுக்கான அலுவலகத்திற்கு உரிய நீதிமன்றங்கள் அமைச்சின் செயலாளரால் அந்த சேமிப்புக் கணக்கினை பேணிச் செல்வதற்கான இணக்கப்பாடு தெரிவிக்கப்படாத காரணத்தால் நிறுவனத்தால் 2021 மார்ச் 01ஆந் திகதி இலங்கை வங்கியின் மெட்ரோபொலிட்டன் கிளையில் பேணிச் செல்லப்படும் கணக்கு இலக்கம் 747557297 கொண்ட சேமிப்பு கணக்கு மூடப்பட்டு அதன் மொத்த மீதியும் இழப்பீட்டுக்கான அலுகவகத்தின் 0002026495 கணக்கு இலக்கமுடைய இலங்கை வங்கியின் தப்ரபேன் கிளையில் பேணிச் செல்லப்படும் நடைமுறைக் கணக்கிற்கு மாற்றப்பட்டு சேமிப்பு கணக்கு மூடப்பட்டுள்ளது. இந்த வட்டித் தொகை நிறுவனத்தின் ஆக்கபூர்வமான செலவினங்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. | அரசின் நிதிப் பிரமாணம் 156(7) இன் பிரகாரம் அரச உத்தியோகத்தர்கள் அனைத்து கொடுக்கல் வாங்கல்களையும் சிக்கனமான முறையில் மேற்கொள்ள வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டுப் பெறுபேறு ரூபா 14,195,306 ஆன மிகையாக காணப்பட்டதுடன், அதனோடு ஒத்ததாக கடந்த வருடத்தின் மிகையானது ரூபா 679,698 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம், நிதிப் பெறுபேறுகளில் ரூபா 13,515,608 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு செலவினம் ரூபா 604,521,491 இனால் குறைவடைந்தமை மற்றும் வருமானம் ரூபா 591,005,883 இனால் குறைவடைந்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியான ரூபா 172,364,105 தொகையான நட்டஈடு செலுத்துவதற்கு 2,861 நலனாளிகளின் ஆவணங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், நிதியேற்பாடுகள் போததாமையால் 2021 மார்ச் 31ஆந் திகதி வரையிலும் 2,757 நலனாளிகளுக்காக ரூபா 163,256,305 தொகையான நட்டஈடு செலுத்தப்பட்டிருக்கவில்லை. | பொது திறைசேரியினால் வருடாந்தம் வழங்கப்படும் நிதியேற்பாட்டினை அடிப்படையான கொண்டு நட்டஈடு செலுத்தப்படும். 2020 திசெம்பர் 31ஆந் திகதி வரையிலும் அங்கீகரிக்கப்பட்ட 2,861 கோவைகளில் 2021 மார்ச் 31ஆந் திகதி வரையிலும் விபத்திற்குள்ளான 83 பேருக்காக ரூபா 7,372,500 தொகையும், பொதுவான மக்களின் ஆதனங்களுக்காக நட்டஈட்டுக்காக 21 நட்டஈட்டாளிகளுக்காக ரூபா 1,735,300 மற்றும் 08 வழிபாட்டுத்தலங்களுக்காக ரூபா 2,050,000 ஆன நட்டஈடு செலுத்தப்பட்டுள்ளது. | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் பாதீட்டு மதிப்பீடுகளை உரிய முறையில் தயாரித்து நிதியேற்பாடுகளை உரிய முறையில் ஒதுக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டினுள் நட்டஈடு செலுத்துவதற்காக காசோலைகள் வழங்கப்பட்ட போதிலும், நட்டஈடு பெறுநர்களுக்கு காசோலைகளை வழங்கும் சந்தர்ப்பத்தில் நாளதுவரையாக்கப்படாத தகவல்களின் அடிப்படையில் ஆவணங்களை பரிந்துரைத்தல் மற்றும் நட்டஈடு வழங்குதல் இடம்பெற்றமையின் | இந்த உரித்துக் கோராத நட்டஈடு பெறுநர்களுக்கு மீள ஆவணங்களை சமர்ப்பித்து உரிய நாளதுவரையாக்கப்பட்ட தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள போதிலும், இந்த தகவல்கள் நிறுவனத்திற்கு கிடைப்பதில் தாமதமான நிலையொன்று | உரிய நலனாளிகளின் நாளதுவரையாக்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் நட்டஈடு செலுத்தல் பரிந்துரைக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையில் நட்டஈடு செலுத்தும் நடைமுறை உரிய முறையில் இடம்பெற்றிருக்கவில்லை. அதன் பிராகரம், 2020 திசெம்பர் 31ஆந் திகதியில் உள்ளபடியாக ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்துள்ள 34 நலனாளிகளுக்குரிய ரூபா 1,860,758 தொகையான நட்டஈட்டுக்காக 2021 மார்ச் 31ஆந் திகதி வரையிலும் நலனாளிகள் உரித்து சமர்ப்பித்திருக்கவில்லை. | நிலவுகின்றது என்பதை ஏற்றுக்கொள்கின்றேன்.<br><br>அதனால், எதிர்காலத்தில் அந்த நடைமுறையை மேலும் துரிதப்படுத்தி உரிய நட்டஈடு கோரிக்கையாளர்களுக்கு நட்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கின்றேன். | |
| (இ) | உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக நட்டஈடு வழங்கும் போது நலனாளியொருவருக்கு செலுத்தப்பட்ட ரூபா 300,000 ஆன முற்பணத்தை கழிக்காது 2019 மே 15ஆந் திகதி எஞ்சிய தொகை செலுத்தப்பட்டிருந்த காரணத்தால் அங்கீகரிக்கப்பட்ட நட்டஈட்டினை விஞ்சி ரூபா 300,000 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் 2021 மார்ச் 31ஆந் திகதி வரையிலும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவரின் மனைவியால் நிறுவனத்திற்கு முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்காக ரூபா 300,000 தொகையான நட்டஈட்டினை செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், பின்னர் பிரதேச செயலகத்திற்கும் குறித்த பெண்ணால் மோசடியான முறையில் மற்றுமொரு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டமையால் இவ்வாறு கூடுதலான தொகையொன்று செலுத்தப்பட்டுள்ளது. | உத்தியோகத்தர்களின் / ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறு அல்லது மோசடி காரணமாக அரசிற்கு ஏற்படும் நட்டம் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தரால் நிதிப்பிரமாணம் 128(1) ‘ஐ’ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|
| ஆக்கபூர்வமான சேவை மட்டத்தினை பேணிச் செல்வதற்கு மற்றும் பதவியணி தொடர்பான காலரீதியிலான மீளாய்வொன்றினை மேற்கொள்ள முடியாத காரணத்தால் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான 19 இரண்டாம் நிலையிலான வெற்றிடங்களும், 02 ஆரம்ப மட்டத்திலான வெற்றிடங்களும் உள்ளடங்களாக சபையில் 21 வெற்றிடங்கள் நிலவின. இதற்கு | திறைசேரி செயலாளரின் அறிவுரைக்கமைய அனைத்து ஆட்சேர்ப்புகளும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.<br><br>அமைச்சின் செயலாளருடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்ட விடயங்களுக்கமைய வெற்றிடமாக நிலவிய இழப்பீட்டுக்கான | ஆக்கபூர்வமான சேவை மட்டத்தினை பேணிச் செல்வதற்கு மற்றும் பதவியணி தொடர்பான காலரீதியிலான மீளாய்வொன்றினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

மேலதிகமாக பணிப்பாளர் நாயகம் மற்றும் பணிப்பாளர் பதவிகள் 02 இற்காக நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்க்காது பதிற்கடமை அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்டிருந்தன.

உதவியாளர் பதவிக்காக பயிலுநர்களை இணைத்துக்கொள்வதற்காக பட்டதாரி பயிலுநர்களை இணைத்துக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்தல், தற்போது அத்தியாவசியமான பதவிகளுக்காக மாத்திரம் ஆட்சேர்ப்பதற்கு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், வெற்றிடமாக காணப்பட்ட உள்ளக கணக்காய்வாளர் பதவிக்காக புதிய ஆட்சேர்ப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.